**இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை:திரு.ச.ஆனந்த்.,**

ந.க.பஅ3/4667/2023 நாள்:16.05.2025

பொருள்: பணியமைப்பு - இராணிப்பேட்டை மாவட்டம் - ஊரக வளர்ச்சி அலகு – சோளிங்கர் ஊராட்சி ஒன்றியத்தில் கரடிகுப்பம் ஊராட்சியில் ஊராட்சி செயலராகப் பணிபுரிந்து 14.10.2021 அன்று பணியிடைக் காலமான திரு.ச.கோபால்(லேட்) என்பவர் வாரிசுதாரர்/மகன் திரு.கோ.கீர்த்திவர்மன் என்பவருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் காசாளராக தற்காலிகமாக பணி நியமனம் வழங்கப்பட்டது – இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
(1) திரு.கோ.கீர்த்திவர்மன், தலங்கை, கரடிகுப்பம் என்பவரின் விண்ணப்பம் நாள்:10.08.2023
(2) இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) செயல்முறைகள் ந.க.பஅ3/4667/2023, நாள்:06.11.2023
(3) அரசாணை நிலை எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (Q1)துறை, நாள்:23.01.2020
(4) அரசாணை நிலை எண்.33, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (Q1)துறை, நாள்:08.03.2023
(5) ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.74261/2023/டி1, நாள்:28.04.2025

* * * * * *

**ஆணை:**

இராணிப்பேட்டை மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, சோளிங்கர் ஊராட்சி ஒன்றியத்தில் கரடிகுப்பம் ஊராட்சியில் ஊராட்சி செயலராகப் பணிபுரிந்து 14.10.2021 அன்று பணியிடைக் காலமான திரு.ச.கோபால்(லேட்) என்பவரது வாரிசுதாரர்/மகன் திரு.கோ.கீர்த்திவர்மன் என்பவருக்கு பார்வை (2)-ல் காணும் செயல்முறைகளின்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் நிலையில் காசாள்ராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் 09.11.2023 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (5)-ல் காணும் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக ஆணையர் அவர்களின் கடிதத்தில் பார்வை (3) மற்றும் (4)-ல் காணும் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்(Q1)துறை, நாள்:23.01.2020 மற்றும் அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்(Q1)துறை, நாள்:08.03.2023-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, திரு.கோ.கீர்த்திவர்மன் என்பவரின் கருணை அடிப்படையிலான பணி நியமனத்தினை பணிவரன்முறை செய்வதற்கு நியமன அலுவலர் என்ற முறையில் தனியர் கருணை அடிப்படையில் பணி நியமனத்துக்கான அனைத்து விதிகளையும் பூர்த்தி செய்வதை உறுதி செய்து மாவட்ட அளவிலேயே பணி வரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணியமர்வு செய்யப்பட்ட திரு.கோ.கீர்த்திவர்மன் என்பவர் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்(Q1)துறை, நாள்:23.01.2020 மற்றும் அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்(Q1)துறை, நாள்:08.03.2023-ன்படியும், கருணை அடிப்படையிலான பணி நியமனத்துக்கான விதிகளையும் பூர்த்தி செய்துள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பணியில் சேர்ந்த நாளான 09.11.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

திருப்புக...

மேற்படி தனியருக்கு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகையினை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

இவ்வாணையினை தனியருக்கு சார்வு செய்திடவும் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்திடவும் சம்மந்தப்பட்ட அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

16.5.2025

**மாவட்ட ஆட்சியரின்**
**நேர்முக உதவியாளர்(வளர்ச்சி),**
**இராணிப்பேட்டை.**

16/5/2025

**பெறுநர்**
திரு.கோ.கீர்த்திவர்மன்,
காசாளர்,
ஊராட்சி ஒன்றியம், காவேரிப்பாக்கம். - உரிய வழிமுறையாக.

**நகல்:** வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ/கி.ஊ), காவேரிப்பாக்கம்.
**நகல்:** ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை -15.
**நகல்:** பஅ3 - இருப்பு கோப்பிற்கு.